DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 13/2021**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சத்தியமூர்த்தி | Caste | : | |
| Father Name | : | கிருஷ்ணமூர்த்தி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **17.03.2026.**

**PW - 19**

**(1** முதல் **3** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், இலால்குடி தாலுக்கா, பெருவளநல்லூரில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பெரியசாமியை தெரியும். அசா.1, 2, 3, 4 ஆகியோரை தெரியும். அவர்கள் பெரியசாமியின் குடும்பத்தினர். ஆஜர் 1 முதல் 3 எதிரிகளைத் தெரியும். 19.01.2020 அன்று புது ஆற்றில் கூட்டமாக நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். யார், என்ன பேசினார்கள் என்று தெரியாது. அச்சமயத்தில் நானும், மணிகண்டனும் அங்கு இருந்தோம். அன்று மாலை புள்ளம்பாடி அருகே ஆற்றில் ஒரு பிணம் கிடப்பதாக சொன்னார்கள். அது பெரியசாமியின் பிணம் ஆகும். அவர் எனக்கு மாமா வேண்டும். நான் அங்கு சென்று அவரது பிரேதத்தைப்

பார்த்தேன். அவரது முதுகு மற்றும் தோள்பட்டையில் காயமிருந்தது. வேறு எதுவும் வழக்கு பற்றி தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

*(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)*

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

பெரியசாமி எனக்கு மாமா முறை என்றால் சரிதான். 2020 ஆம் ஆண்டு பொங்கலுக்கு முன்பு ஒருநாள் 2 ஆம் எதிரி கவியரசன் மாடு பிடித்து சென்றபோது அது, பெரியசாமியின் மீது உரசியதாகவும், அதனால் பெரியசாமி, கவியரசனை திட்டி அடித்துவிட்டார் என்றால் சரியல்ல. பெரியசாமியின் பேத்தியின் பெயர் ஆர்த்தி என்றால் சரிதான். ஆர்த்தியை 3 ஆம் எதிரி திருமுருகன் காதலித்தார் என்றால் அதுபற்றி தெரியாது. 1 ஆம் எதிரி தமிழ்செல்வன் அதிமுகவில் இருக்கிறார். 1 ஆம் எதிரி உள்ளாட்சி தேர்தலில் கலந்துகொண்டார். 1 ஆம் எதிரிக்கு எதிராக இறந்துபோன பெரியசாமி தேர்தலில் வேலை செய்தாரா என்றால் எனக்கு தெரியாது. போலிசார் விசாரித்தபோது, நானும், மணிகண்டனும் 2020 பொங்கலுக்கு முன்பு ஒருநாள் புதுவாய்க்காலுக்கு போனபோது சாவடி அருகே எதிரிகள் மூவரும் சாவடியில் உட்கார்ந்து, பெரியசாமி தங்களுக்கு பல்வேறு வகையில் தொந்தரவு தருவதாகவும், மூன்று பேரும் சேர்ந்து அவருக்கு ஒரு முடிவு கட்டவேண்டுமென்றும் பேசிக்கொண்டார்கள் என்றும், அதை நான் கேட்டதாக சொன்னேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளுக்கு பயந்து கொண்டு உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் இந்த சாட்சியிடம் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.